'L'

# THE POSITION OF WOMEN IN THE CHURCH

## திருச்சபைகளில் பெண்களின் நிலை (பங்கு)

**1. திருச்சபைகளில் பதவிகளில் பெண்கள் அதிகாரத்தில் இருக்கலாமா?**

**2. கிறிஸ்துவ திருச்சபைகளில் பெண்கள் உபதேசிக்கலாமா?**

இன்றைய நாட்களில் இதைப் போன்ற அநேக பிரச்சனைகள் இருக்கின்றன. காணப்படுகிற சபைகளில் தேவனுடைய வார்த்தையை கவனிப்பதற்கு பதிலாக உலகத்திற்கு செவி சாய்க்கிறவர்களாய் இருக்கிறார்கள். நாம் இப்போது தேவனுடைய வார்த்தைக்கு தெளிவாய் செவி சாய்ப்போம். எல்லா கேள்விகளுக்கும் பதில்களை நமக்கு கொடுக்கும் இந்த முடிவில்லாத எந்தப் பக்கத்திற்கும் பதிலை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

நம்முடைய சரீரமாகிய திருச்சபையானது தெளிவாக வார்த்தையை விசுவாசித்து பிரிந்து இருக்கிறது.

**ஆண்-பெண்-சிருஷ்டிப்பு :**

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே உள்ள உறவை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென்றால், ஆறாம் நாளில் அவர்கள் இருவரையும் உண்டாக்கின அந்த ஆரம்பத்திற்கு நாம் அவசியம் போக வேண்டும். கடவுள் (ஆதாம்) ஆணை முதலில் உருவாக்கிப் பிறகு பெண்ணாகிய ஏவாளை உருவாக்கினார். ஆதி. 2: 21–22. ஆதாம் என்ற மனிதனுக்கு பொருத்தமான துணையான பெண் உண்டாக்கப்பட்டாள். அவள் அவனுடைய விலா எலும்பினால் உருவாக்கப்பட்டாள். அது எதைக் குறிக்கிறது என்றால் எப்படி ஸ்திரீயானவள் அவன் பக்கத்திலிருந்து அவனுக்கு துணையாயிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. புருஷனானவன் குடும்பத்துக்கு தலையாயிருக்கிறான். ஸ்திரீயானவள் அவனுக்கு உதவியாளாய் துணையாயிருக்கிறாள். பாவத்தில் விழுந்த பிறகு கடவுள் புருஷனுக்கும், ஸ்திரீக்கும் இடையேயான உறவைக் குறித்து குறிப்பிடும்போது பெண்ணைக் குறித்து இவ்விதமாய்ச் சொல்கிறார்.

அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் ஆதி 3:16. இது மிக ஆரம்பக் காலத்திலிருந்த தெய்வீக கட்டளையாயிருக்கிறது. புருஷன் குடும்பத்துக்கு தலையாயிருக்கிறான். மனைவியை அவன் ஆண்டு கொள்ளுவான். ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் புருஷனுக்கு கீழ்படிந்து ஜீவித்து பொருத்தமான துணையாயிருக்க வேண்டும்.

## கடவுளுடன் புருஷன்-ஸ்திரீயின் உறவு நிலை

கடவுளுடைய நியாயப் பிரமாணத்தை மீறுவதின்மூலம் இருவரும் (புருஷன்–ஸ்திரீ) தண்டனைக் குரியவர்களாயிருப்பார்கள்.

எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாய் இருக்கிறார்கள். அதாவது, ஆணும், பெண்ணும் அவர்களில் ஒருவரும் இல்லை. புருஷனாகட்டும். ஸ்திரீயாகட்டும். யாரும் இல்லை.

எல்லாரும் பாவமுள்ள சரீரத்தில் பிறந்திருக்கிறோம். எந்தக் காரணம் அவர்களை தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒரு பக்கமாக திருப்பிவிட்டது. ரோமர் 3 அதிகாரத்தில் வசம் 10ம், 18ம் வசனமும் படியுங்கள். புருஷனும் ஸ்திரீயும் பாவிகளாயிருக்கிறார்கள். இரட்சிப்பு தேவைப்படுகிறது. அந்த வாக்கியம் சொல்கிறது. பாவிகளாகிய புருஷனையும், ஸ்தீரியையும் இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார். எல்லா ஜனத்திற்கும் இரட்சகராய் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார்.

பாவம் நிறைந்த உலகத்தில் ஜீவிக்கிற புருஷன் – ஸ்தீரி இவர்களுடைய எல்லா பாவங்களையும் ஏற்றுக் கொண்டு (சுமந்து) திரு இரத்தத்தை கறைப்படுத்தி பரிகாரியாய் இலவசமாய் இரட்சித்த தேவ ஆட்டு குட்டி அவர் சரியாக நாம் எல்லோரும் இப்போது பாவிகள். ஆகவே, எல்லாருடைய பாவமும் கல்வாரிச் சிலுவையில் மன்னிக்கப்பட்டது.

மனந்திரும்பவும் விசுவாசிக்கவும், இப்பொழுது கடவுள் எல்லோரையும் எவ்விடத்திலும் அழைக்கிறார். இருவரும் ஒரே மாதிரியான பாவ மன்னிப்பை பெற்றவர்கள், இன்னும் அவர்கள் இருவரும் இன்னும் வேறுபட்டிருக்கின்றனர்.

புருஷனும்–ஸ்தீரியும் ஒவ்வொருவரும் வேறுபட்ட ஸ்தானத்தை தங்கள் ஜீவியத்தில் உடையவராயிருக்கின்றனர்.

பிள்ளைகளை சுமந்து பெற்று தருகிற கடமை பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்கள் இல்லை. இதை யாராலும் மறுக்க முடியாது.

சரியாக ஆணுக்கும்–பெண்ணுக்கும் இடையே வித்தியாசமிருக்கிறது. ஸ்தீரிகளைக் காட்டிலும் பொதுவாக ஆணானவன் பலசாலியாயிருக்கிறான் என்பதை கவனிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுடைய ஜீவியத்தில் கடவுள் கொடுத்திருக்கும் ஸ்தானமும் வித்தியாசமானதாயிருக்கிறது.

## ஆணும்-பெண்ணும் வீட்டில்

எபேசி. 5:21 – தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள்.

ஒவ்வொருவரும் தங்கள் ஜீவிய ஸ்தான நிலையில் (ஆணும் பெண்ணும்) ஒருவருக்கொருவர் மற்றவர்களுக்கு – கீழ்படிந்து ஜீவிக்க வேண்டும் என்று தேவனுடைய கட்டளை வழிகாட்டுகிறது.

ஆதியில் ஏதென் தோட்டத்தில் கடவுள் திருமணத்தையும் வீட்டையும் ஏற்படுத்தி ஆணுக்கும், பெண்ணுக்குமாக கொடுத்தார்.

இந்த இரண்டு மக்களும் வீட்டில் எப்படி இருக்க வேண்டும் என்பதை யார் இது கடவுள் ஏற்படுத்தினதாயிருக்கிறது.

எபேசி. 5:22–24. மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷனுக்குக் கீழ்படியுங்கள்.

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்கு தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறதுப்போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்படிந்திருக்க வேண்டும். கர்த்தருக்கு எதிராக திருச்சபையானது எதிர்த்து நிற்கலாமா?

நம்முடைய கற்பனைக்குகூட அது கடினமாயிருக்கிறது. ஆகவே மனைவிகளே உங்கள் கணவனுக்கு கீழ்படிந்திருங்கள். உங்கள் புருஷர்களுக்கு எதிராக எதிர்த்து நிற்காதீர்கள். இதைப்போலவே மனைவியானவள் தன் சொந்த புருஷனை பற்றிக் கொண்டிருக்க வேண்டும். மனைவியானவள் கணவன் சொல்லுகின்ற, செய்கின்ற எல்லாவற்றுக்கும் ஒரு வேளை ஒத்துப்போகாமலிருக்கலாம். ஆனால் அவன் பாவம் செய்தால், அவளை பாவம் செய்யச் சொன்னால், தவிர ஸ்தீரியானவள் எல்லாவற்றிலும் புருஷனுக்கு கீழ்படிந்து ஜீவிக்க வேண்டும். எபேசி. 5:25–28. புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் அன்புக்கூர்ந்து,

நாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல், பரிசுத்த தனக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்.

அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூற வேண்டும் தன் மனைவியில் அன்பு கூறுகிறவன் தன்னில்தான் அன்பு கூறுகிறான். அதே வண்ணமாக அப்படியே கடவுள் திருச்சபையையும் நேசிக்கிறவராயிருக்கிறார். அவருடைய அளவற்ற அன்பினாலே ஆகவே புருஷர்களே நீங்கள் உங்களை மனைவியை ஆராதிக்கிறவராய் அல்லது நேசிக்கிறவராய் இருங்கள்.

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள், அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள். கொலே. 3:19.

அந்தப்படி புருஷர்களே மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்கு தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களோடே வாழந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்ய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்து கொள்ளுகிறவர்களான படியினால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள். 1 பேதுரு. 3:7.

இந்த வேதப் பகுதியை நாம் தியானிக்கும்போது, புருஷன் மனைவியினிடத்தில் கொடூரமுள்ளவனாய் இருப்பதை நாம் பார்க்க முடியாது.

அவன் அவளைஆண்டு கொள்ளுகிறவனாய் இருந்தபோதிலும், அவன் அன்பினால் அவளை வசீகரித்து ஆண்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் வீட்டில் கொடுக்கப்பட்ட ஸ்தானம் இதுவாயிருக்கிறது. எப்படியும் உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புக் கூறுவதுபோல தன் மனைவியினிடத்திலம் அன்புக் கூறக் — கடவன் மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.

## திருச்சபையில் ஆணும்-பெண்ணும்

அப்படியே கடவுள் வீட்டையும், குடும்பத்தையும் ஏற்படுத்தினார். ஆகவே அப்படியே பூமியில் அவருடைய திருச்சபையும், ஏற்படுத்தினார். சரியாக அதே அளவில் அப்படியே அவர் வீட்டில் அவர்களுடைய கடமைகளையும், உத்தரவுகளையும், வழிக்காட்டுதலையும், காட்டுகிறார். அவ்வண்ணமாகவே அவர்கள் அவர்களுடைய திருச்சபைகளிலும் இருக்கிறார்கள்.

அப்படியே புருஷனானவன் குடும்பத்திற்கும் (வீட்டிற்கும்) மனைவிக்கும் தலையாயிருக்கிறான். ஆகவே, அப்படியே புருஷனானவன் திருச்சபைக்கும் தலையாயிருக்கிறான். புதிய ஏற்பாட்டில், கண்காணி, மூப்பர், உதவியாளர் ஆகிய அதிகார பதவிகளைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே மனைவியையுடைய வர்களாய் இருக்க வேண்டியது. தேவையாயிருக்கிறது. 1 தீமோ. 3:2, 3:12, தீத்து 1:6.

மனிதன் இந்த தெய்வீக ஒழுங்கை இந்தக் கடைசி நாட்களில் மீறுவதற்கு முயற்சி செய்வான் என்பதை கடவுள் முன்பாகவே தன்னுடைய முன் அறிவின்மூலம் தெரிந்து வைத்திருந்தார்.

தலைவனாயிருக்க, போதகராயிருக்கிறவர் திருச்சபையில் அதிகாரமுடைய வராயிருக்க ஆணையும், பெண்ணையும், குழந்தைகளையும் திருச்சபையில் அதிகாரம் செய்பவராயிருப்பவர்கள் அதைப் போன்ற தலைவர்கள், தலைமை வகிப்பவர்கள் அந்த மாதிரி மனிதராயிருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் திருச்சபையை நிர்வகிக்க வேண்டும். சரியாக அப்படியே அவரே வீட்டிலும் தலைவராகவும் இருப்பார்.

<u>1 தீமோ. 2:11-12.</u>

பெண்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது இங்கே கட்டளையாயிருக்கிறது. ஆனால், அவர்கள் திருச்சபையில் போதிப்பது ஆனது அவர்கள் கடவுளுடைய தெய்வீக ஒழுங்கை மீறினதாயிருக்கிறது. திருச்சபையில் அதிகாரம் ஆணுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 1 தீமோ, தீத்து வேதப் பகுதிகளில் நாம் படிக்கும் போது இந்தக் கொள்கையானது மிகவும் அதிகமாக நல்ல முறையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், ஒரு பெண் போதகராகவோ, பாஸ்டராகவோ இருந்து ஆண்கள்மேல் அதிகாரம் செலுத்தும் பழக்கத்தை யார் வழக்கப்படுத்தியது?

அப்படியானால், பெண்கள் ஆண்களுக்குப் பதிலாக திருச்சபைகளில் முடிவு எடுக்கிறவர்களாக, தீர்மானம் எடுக்கிறவர்களாக இருந்தால், பிறகு அவர்கள் ஆண்களின்மேல் ஆதிக்கம் அதிகாரம் பழக்கம் உடையவர்களாக அதை வழக்கப்படுத்திக் கொள்வார்கள்.

அப்படியானால், எந்த ஆண்கள் படிக்கிற ஞாயிறு பள்ளிகளிலும், அல்லது வேத பாட வகுப்புக்களிலும், ஒரு பெண் பாடம் நடத்தினால், பிறகு திருச்சபையில் அவள் ஆண்களின்மேல் ஆதிக்க அதிகாரம் பண்ணும் வழக்கம் உண்டாகும்.

ஆண்களின் மேல் அதிகாரம் செலுத்தும் அதிகாரியானவன் ஆண்களின்மேல் அதிகாரம் செலுத்தும் பழக்கமாயிருக்கிறது என்று கடவுள் சரியான கிரமமான ஒழுங்கான முறையில் நமக்குச் சொல்லியிருக்கிறார்.

இதுவரை நாம் அவருடைய வழியில் திசையில், பின் தொடர்கிறவர்களாயிருக் கிறோம். அப்படியானால், நாம் நம்முடைய சொந்த ஆலோசனைப்படி நடந்தால், பிறகு நாம் பாவம் செய்தவர்களாயிருப்போம். கொரிந்தியர்களின் திருச்சபைக்கு புவல் இந்தக் கொள்கையை தீமோத்யேவுக்கு வெளிப்படுத்துகிறார். கடவுளாயிருக்கிறவர் குழப்பமுள்ள கடவுளல்ல. ஆனால், சமாதானத்தின் கடவுளாயிருக்கிறார். அதே அளவில் எல்லா திருச்சபைகளிலும் உள்ள பரிசுத்தவான்கள் திருச்சபைகளில் பெண்கள் கண்டிப்பாக அமைதி காக்க வேண்டும். அவர்கள் பேசுவதற்கு அனுமதியில்லை. ஆனால், உதவி செய்கிறவர்களாயிருக்கலாம் என்று நியாயப் பிரமாணமும் சொல்லுவதாயிருக்கிறது. அப்படியானால், அவர்கள் எதையாவது தெரிந்து கொள்ள ஆவலுள்ளவர்களாயிருந்தால், கணவனிடம் அனுமதிப் பெற்று வீட்டில் அவரிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

திருச்சபைகளில் பெண்கள் பேசுவதென்பது வெட்கத்துக்கு உரியதாயிருக்கிறது. என்ன?

ஆண்டவர் தோற்றுவித்த வார்த்தை உன்னுடன் இருக்கிறது. நீங்கள் ஒருவருக்கு ஒருவர் போய்ச் சேர்கிறவர்களாயிருப்பீர்களாக?

1 கொரி. 14:33–36 தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகள் எல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.

சபைகளில் உங்கள் ஸ்தீரிகள் பேசாமலிருக்கக் கடவர்கள், பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவு இல்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும், வேதமும் அப்படியே சொல்லுகிறது.

அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷர்களிடத்தில் விசாரிக்கக் கடவர்கள், ஸ்தீரிகள் சபையிலே பேசுவது அயோக்கியமாயிருக்குமே.

தேவ வசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது?

அது உங்களிடத்திற்கு மாத்திரமா வந்தது?

பவுல் சொல்லிய வார்த்தைகள் மிகவும் கடினமானதாகவும், உறுதியுடையதாகவும், நிச்சயமுடையதாயும் இருக்கிறது.

நாம் என்ன சொல்ல முடியும்?

கொரிந்தியர் திருச்சபை வலிமையுள்ளதாயிருப்பதற்கு அப்படியே இந்த கொள்கை பிரயோகிக்கப்பட்டது. சம்மந்தப்பட்டவர் ஆவியில் வேறுபட்டவராய் திருச்சபையில் அந்நிய பாஷையைக் குறித்து குழப்பம் உடையவராயிருந்தார்கள். இதனுடன் வெளிப்படையாக பெண்கள் பங்கு கொள்ளுதல், ஆண்களின் மேல் பலாத் காரமாக அதிகாரம் செலுத்துவதின்மூலம் குழப்பமுடையவர்களாயிருக்கிறார்கள். பொது ஆராதனையில் ஆண்கள் பேசினார்கள். போதித்தார்கள். கொரிந்திய திருச்சபைகளில் பெண்கள் கீழ்படிதலுடன் கற்றுக் கொண்டார்கள். பொது ஆராதனையில் ஆண் போதகர்களுடன், ஆண் ஆசிரியர்களுடன் வாதம் செய்யவில்லை. வாக்குவாதம் செய்யவில்லை. வேறுபட வில்லை. ஆனால் இன்று?

இன்றைய நாட்களில் பெண்கள் திருச்சபைகளில் அப்படியே ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமுடைய போதகராகவோ? பாஸ்டராகவோ இருக்க முடியுமா?

திருச்சபைகளில் ஆண்களின்மேல் அதிகாரம் செலுத்தும் ஆதிக்கமுடைய வர்களாய், ஆண்களின் மேல் ஆதிக்கம் செலுத்தும் அலுவல் உடையவர்களாய் இருக்கக்கூடாது. இல்லை. அப்படி இருக்கக்கூடாததென்று கடவுளுடைய வார்த்தை சொல்கிறது. இல்லையென்று – அப்படியானால், பெண்கள், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுப்பதானது மிகவும் சிறந்தாயிருக்கிறது.

அப்படியானால், திருச்சபகைளில் பெண்களின் மேல், குழந்தைகளின் மேல் அதிகாரம் செலுத்துபவர்களால் ஆதிக்கம் செலுத்தபவர்களாயிருப்பது சிறந்ததாயிருக்கிறது. ஆனால், அது கடவுளுடைய தீர்மானமாயிருக்கிறது.

ஆண்கள் திருச்சபை அப்படியே கூடவே அவர்களுடைய வீடு இரண்டிற்கும் எஜமான் அதிகாரமுடையவராய் இருக்க வேண்டுமென்பது கடவுளுடைய கட்டளை. அப்படியானால், யார் அவர்கள் சொல்லுகிறார்கள். பவுல் என்ன எழுதினாரோ அது இன்றைக்கு நாம் பிரயோகிக்க அல்ல என்றும் அவர் கண்டிப்பாக சொன்னார்கள். ஏன் இல்லை?

அங்கே அவ்விடத்தில் கொரிந்தியர்களுக்குள் இருந்த பழக்கம் எந்த அந்த பழக்கத்தை இந்நாட்களில் கடைப்பிடிக்க தேவையில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், வீட்டிலும், திருச்சபைகளிலும் எல்லா தலைமுறையினருக்கும் இது தெய்வீக கட்டளையாயிருக்கிறது.

இது இந்த உண்மையை அன்பான இரட்சகருடைய கர்த்தரின் வார்த்தை நமக்குச் சொல்லுகிறதாயிருக்கிறது. அன்பான கர்த்தருக்கு முரண்பாடான, விரோதமான மாறக்கூடிய பாவமுள்ள இந்த உலகத்து ஆலோசனைகளை கேட்காமல், கவனிக்காமல், நாம் இப்போது தேவனுடைய வார்த்தைகளை கவனமாய் கவனிக்கிறவர்களாய், கேட்கிறவர்களாய், அதன்படி வார்த்தை நமக்கு உபதேசிக்கிறபடி நடக்கிறவர்களாய் இருப்போம். ஆமென்.